**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097150

1. District மாவட்டம் : Namakkal
PS: காவல்நிலையம் V & AC Namakkal
Year: ஆண்டு 2018
FIR No.: மு.த.அ. எண் 12/AC/2018
Date: நாள் 16.10.2018

2. (i) Act சட்டம்: The Prevention of — Sections பிரிவுகள்: U/s 7A
(ii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018. Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல்
Date to : நாள் வரை 1) 24.09.2018 afternoon. 2) 14.10.2018 at about 19.30 hrs.
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை 3) 16.10.2018 at about 16.15 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.10.2018
Time நேரம் : 18.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol. III 16.10.18
Time நேரம் : 18.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written (Computer Typed)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் About 3 K.m West.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி TAHDCO office Namakkal at District Collectorate Campus, Namakkal.
(c) In case outside limit of this Police Station, then the Name of P S
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Ganeson
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o P. Ramalingam
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Driver
(g) Address : முகவரி 22/134-A-1, Perandar kadu, Kumarapalayam, Namakkal District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Varadharaj, Broker, TAHDCO office, Namakkal.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved : –
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: –
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : –
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets are enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed M. Nallammal Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS ............................................... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ......................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு R. Ganesan 16/10/18

Signature of the Officer in-charge, Police Station [signature] 16/10/2018
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
16.10.2018 at 20.00 Hrs.

Name: பெயர் M. NALLAMMAL
Rank: நிலை ........................ No. எண் ..........
INSPECTOR OF POLICE
V&AC, NAMAKKAL.

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/AC/2018 u/s 7A of the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

16.10.2018-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 18.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் தாலுக்கா, பெராந்தர்காட்டைச் சேர்ந்த ராமலிங்கம் என்பவரின் மகன் R.கணேசன் என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கணினி மூலம் தயார் செய்து பிரிண்ட் எடுக்கப்பட்ட ஒரு எழுத்துமூலமான புகாரினை சமர்ப்பித்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:

அனுப்புதல் R.கணேசன், S/o P.ராமலிங்கம், 22/134-A-1, பெராந்தர்காடு, குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம். பெறுதல் உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நாமக்கல் மாவட்டம். ஐயா, நான் குமாரபாளையத்தில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். 12-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் ஹெவி டிரைவிங் லைசன்ஸ் உள்ளது. TAHDCO-ல் மானியத்துடன் லோன் கொடுப்பது சம்பந்தமாக News பேப்பரில் செய்தி படித்தேன். நான் இந்து ஆதி திராவிடர் வகுப்பை சார்ந்தவன். அதனால் TAHDCO மூலம் லோன் வாங்கி சொந்தமாக ஆட்டோ வாங்கி தொழில் செய்யலாம் என்று முடிவு செய்தேன். அதற்காக கடந்த 29.08.2018 அன்று ஆன்லைன் மூலம் TAHDCO-ல் 2018-2019 ஆண்டிற்கான Entrepreneur Development Programme (EDP)-ன் கீழ் மனு செய்தேன். அப்போது விண்ணப்ப கட்டணமாக ரூ.60/- ஆன் லைன் மூலம் செலுத்தினேன். அதன்பின் நான் 24.09.2018-ம் தேதி அன்று நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு முதலமைச்சர் காப்பீட்டு திட்ட கார்டு வாங்குவதற்காக வந்துவிட்டு அப்படியே மதியம் சுமார் 01.30 மணி சுமாருக்கு TAHDCO-அலுவலகம் சென்று எனக்கு இதுவரை இன்டர்வியூ கார்டு வராதது குறித்து கேட்டேன். அப்போது மேனேஜர் ஆபீசில் இல்லை. அங்கிருந்த ஒரு கிளார்க் ஒருவர், சார் மீட்டிங் போய்விட்டார் என்று சொல்லி, மேனேஜர் திரு.சக்திவேல் அவர்களின் போன் நெம்பர் கொடுத்து பேசிக்கொள்ள சொன்னார். நான் மேனேஜர் சக்திவேல் அவர்களுக்கு

போன் செய்து பேசியபோது அவர் இராசிபுரத்தில் மீட்டிங்கில் உள்ளதாகவும், என்னை வெயிட் பண்ண சொன்னார். நான் அங்கேயே காத்திருந்தேன். அப்போது அங்கு ஆபிசில் இருந்த ஒருவர் என்னிடம், என்ன லோனுக்கு அப்ளை செஞ்சிருக்கீங்க என்று விபரம் கேட்டார். நான் என் லோன் சம்மந்தமாக விபரம் சொன்னேன். அவர் தனது பெயர் வரதராஜ் என்றும், என்னைப் போல் லோன் வாங்க வருபவர்களுக்கு அதிகாரிகளிடம் பேசி லோன் ஏற்பாடு செய்து கொடுத்து வருவதாகவும் சொன்னார். அதற்கு கொஞ்சம் செலவாகும் என்றும் சொன்னார். மேலும் வரதராஜ் என்னிடம் இன்டர்வியூ முடிஞ்சுதா என்று கேட்டார். நான் இன்னும் முடியவில்லை என்று சொன்னேன். சரி இன்டர்வியூ வரும்போது சொல்லுங்க நான் லோனுக்கு ஏற்பாடு செய்யறேன். உங்க லோனுக்கு ரூ.3,200/- ஆபிசருக்கு கொடுத்தால் தான் லோன் ரெடியாகும் என்றும், இன்டர்வியூ எல்லாம் பார்மாலிட்டிக்குதான் என்றும் சொல்லிவிட்டு அவரது செல்போன் நெம்பர் 9626534623-ஐ என்னிடம் கொடுத்தார். பணம் கொடுக்கலைன்னா வேலையாகாது, இன்டர்வியூ வரும்போது பணம் ரெடிபண்ணிகிட்டு வா, மற்றதை நான் பார்த்துக்கிறேன் என்றும் சொன்னார். பின்னர் அன்று மாலை சுமார் 6.30 மணிக்கு மேனேஜர் திரு.சக்திவேல் அவர்கள் ஆபீஸ் வந்தார். நான் அவரை சந்தித்து எனது லோன் சம்பந்தமாக கேட்டபோது, அவர் அடுத்த மாத இன்டர்வியூக்கு உங்களுக்கு லெட்டர் வரும் போனிலும் தகவல் சொல்லுவோம், அப்ப வாங்க என்று சொன்னார். அதன்பின் ஒரு வாரம் கழித்து மேனேஜர் திரு.சக்திவேல் அவர்களிடம் போன் செய்து நான் டிரைவராக இருப்பதால் வெளியில் சென்று விடுவேன் என்னைக்கு இன்டர்வியூக்கு கூப்பிடுவீங்க என்றும், திடீர் என்று கூப்பிட்டால் என்னால் வரமுடியாமல் போய்விடும் என்றும் சொன்னேன். அதற்கு அவர் லெட்டர் வரும் என்று சொல்லிவிட்டார். பின் அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் அவருக்கு போன் செய்தபோது 12.10.2018-ம் தேதி இன்டர்வியூ, அன்னைக்கு வந்திடுங்க, லெட்டரும் வரும் என்று சொன்னார். அதேபோல் எனக்கும் நேர் காணலுக்கான அழைப்பு வந்தது. 12.10.2018-ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு TAHDCO-அலுவலகம் சென்று நேர் காணலில் கலந்து கொண்டேன். அன்று சுமார் 50 பேர் நேர்காணலுக்கு வந்திருந்தார்கள். முதலில் சர்ட்டிபிகேட்டுகளை சரிபார்த்தார்கள். பின் மேனேஜர்

திரு.சக்திவேல் மற்றும் ஒரு அதிகாரியும் நேர்காணல் செய்தார்கள். நேர்காணலின் போது மேனேஜர் திரு.சக்திவேல் என்னிடம் லோன் வாங்க இருக்கும் ஸ்டேட் பேங்கில் இருந்து ஒரு லெட்டர் வாங்கி வரும்படி அறிவுறுத்தினார். அதன்பின் என்ன லெட்டர் எப்படி வாங்குவது என்று விளக்கம் கேட்கலாம் என்று கடந்த 14.10.2018-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு சுமார் 7.30 மணிக்கு புரோக்கர் திரு.வரதராஜ் அவர்களுக்கு போன் செய்தேன். அவர் இன்டர்வியூ வந்த அன்று ஏன் என்னை பார்க்கவில்லை நான் தான் ஏற்கனவே சொல்லிருந்தேன் தானே என்றும், அன்றைய தினமே தான் 5 பேரிடம் தலா ரூ.3,000/- வீதம் வாங்கி மொத்தம் ரூ.15,000/- மேனேஜருக்கு கொடுத்து அவங்க பைல் ஓ.கே. செய்துவிட்டேன் என்றும், பேங்கிலிருந்து எந்த பார்மும் எனக்கு தரமாட்டார்கள், TAHDCO அலுவலகத்திலிருந்துதான் இரண்டு பார்ம் பேங்குக்கு அனுப்புவார்கள் என்றும், அதில் ஒன்றை பேங்கில் வைத்துக்கொண்டு மற்றொன்றை கையெழுத்து செய்து திருப்பி அனுப்புவார்கள் என்றும், லோன் வேண்டும் என்றால் நாளைக்கு ரூ.3,200/- உடன் வந்துவிடு என்று சொன்னார். எனக்கு வேலை இருந்ததால் நான் புரோக்கர் வரதராஜன் சொன்னபடி அவரை சென்று பார்க்க இயலவில்லை. இன்று 16.10.2018-ம் தேதி மதியம் சுமார் 01.10 மணிக்கு வரதராஜ் எனக்கு போன் செய்திருந்தார். அப்போது என்னால் அவரது போனை அட்டன்ட் செய்து பேசமுடியவில்லை. அதனால் நான் இன்று 16.10.2018-ம் தேதி மாலை சுமார் 4.15 மணிக்கு புரோக்கர் வரதராஜ்க்கு என்னுடைய செல்போன் 8610015538 என்ற எண்ணிலிருந்து அவருடைய செல்போன் நெம்பர் 9626534623-க்கு போன் செய்தபோது, அவர் ஏன் நான் போன் செய்தபோது எடுக்கவில்லை என்று கேட்டார். நான் வேலையாக இருந்ததால் போனை எடுக்க முடியவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர், இன்று காலை எனது பைல் சம்பந்தமாக தாட்கோ DM, AM இரண்டு பேர் கிட்டேயும் பேசியதாகவும், அப்போது அவர்களுக்கு தனியாக கொடுக்க வேண்டிய பணம் கொடுத்தால் லோன் வாங்குபவருக்குதானே ஆதாயம், பணம் கொடுத்தால் லோன் கொடுக்கலாம், இல்லை என்றால் ஆகாது என்று சொல்லிவிட்டதாக சொன்னார். மேலும் என்னிடம் பணம் ரூ.3,200/- உடன் நாளை காலை 11.00 மணிக்கு நாமக்கல் TAHDCO அலுவலகம் வந்துவிடும்படியும், தான் மேனேஜரிடம் பேசி வேலையை முடித்து கொடுத்து

விடுவதாகவும் சொன்னார். புரோக்கர் திரு.வரதராஜ் அவர்களிடம் லஞ்சமாக பணம் கொடுத்து நாமக்கல் TAHDCO அலுவலகத்தில் எனது லோன் சம்பந்தமான வேலையை முடிக்க எனக்கு விருப்பம் இல்லை. ஆகையால் நான் ரூ.3,200/- பணத்துடன் நாளை 17.10.2018 காலை நாமக்கல் TAHDCO அலுவலகம் சென்று புரோக்கர் திரு.வரதராஜ் அவர்களை பார்க்க உள்ளேன். அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) R.Ganesan 16/10/18.

மேற்கண்ட புகார் மனுவை பெற்று, படித்துப்பார்த்து, புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், எதிரிக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 16.10.2018-ந்தேதி மாலை 19.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.12/AC/2018 u/s 7A of the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் நாமக்கல் மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து, வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

16/10/2018

(M.நல்லம்மாள்)
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.